பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam.Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆனி 17௳ (1—7—67) சனி ★ வெளியூர்: ஆனி 18௳ (2—7—67) ஞாயிறு [இதழ்: 15

## முழக்கமிட்டுப் பயன் என்ன?

பூனா, சூன் 30—

"சனநாயகத்தைக் காக்க அறிவாளர்கள் முன்வர வேண்டும். நாட்டிற்கு எந்த ஆட்சிமுறை ஏற்றது என்பதைத் தீர்மானிப்பதற்கு இதுவே நேரமாகும்.

"நாட்டின் 'ஒருமை' என்பது, வெறும் 'முழக்க'மாக மட்டும் இருக்கக்கூடாது; நடைமுறையில் அதைக் கொண்டுவர வேண்டும்."

## பெரியார்— அண்ணா சந்திப்பு

சென்னை, சூன் 30—

சென்னைத் தலைமை மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெற்று வரும் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களை இன்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் சந்தித்து உடல்நிலை குறித்து விசாரித்தார்கள்.

இருவரும் சுமார் 20 நிமிட நேரம் பேசிக்கொண்டிருந்தனர்.

அண்ணா அவர்களுடன் சி. வி. இராசகோபால் எம்.சி., மா. கி. தசரதன், சா. கசேந்திரன் ஆகியோரும் சென்றிருந்தனர்.

## மாநில அரசுகளுக்கு வழங்கும் உணவுப் பங்கீட்டில் வெட்டு

புதுடில்லி, சூன் 30—

மத்திய அரசு மாநில அரசுகளுக்குப் பங்கிட்டு வழங்கும் உணவுப் பொருட்களில், சூலை மாதத்தில் மேலும் 1,00,000 டன் வெட்டு ஏற்படும்.

"சூயஸ் கால்வாய் மூடப்பட்டதால், மேலை நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் உணவுப் பொருட்கள் வந்து சேரவில்லையாதலால் இந்த வெட்டு ஏற்பட்டுள்ளது" என்று மத்திய உணவு அமைச்சகம் தெரிவிக்கிறது.

# சட்டமன்ற வரலாற்றிலேயே புது திருப்பம்

## ஏற்றத்தாழ்வைப் போக்கும் சோஷலிசப் புரட்சி உருவாகிறது

### நியாயத்திற்கு மதிப்பளிக்கிறது தி. மு. கழக அமைச்சரவை

### 'நல்வரவு' மலர் வெளியீட்டு விழாவில் தலைவர்கள் பெருமிதம்

சென்னை, சூன் 30—

"முதலமைச்சர் அண்ணா அவர்கள், வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றத்தில் அளித்தபோது, வேர்க்கடலைக்கு வரி விதித்ததைக் காங்கிரசார் எதிர்த்தனர். எதிர்க் கட்சியினர் கூறியதில் நியாயம் இருப்பதை உணர்ந்த நமது முதலமைச்சர், வரவு-செலவுத் திட்ட இறுதி உரையில், வேர்க்கடலைக்கு விதித்த வரியை நீக்கிவிட்டதாக அறிவித்தார்; இது, தமிழகச் சட்டமன்ற வரலாற்றிலேயே இல்லாத நிகழ்ச்சியாகும்"

என்று, கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், 'நல்வரவு' மலர் வெளியீட்டு விழாவில் பேசுகையில் தெளிவுபடுத்தினர். அவர் மேலும் கூறியதாவது:—

"நாங்களும் கடந்த 10 ஆண்டுகளாகச் சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியாக இருந்தோம்; 'வரி விதித்திருப்பது கொடுமையானது' என்று எவ்வளவு வலியுறுத்தினாலும் காங்கிரசார் கேட்கமாட்டார்கள்—வரி விதித்தே தீருவார்கள்.

ஆனால், எதிர்க் கட்சியினர் கூறுவதாக இருந்தாலும், நியாயமான மனப்போக்குடன் அந்தக் கருத்துக்களை ஏற்று, அதை உடனே செயல்படுத்தினர்கள்—அண்ணா அவர்கள்."

### ஏ. இலட்சுமணசாமி

விழாவிற்குத் தலைமைவகித்த டாக்டர் ஏ. இலட்சுமணசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மற்ற மாநிலங்களைப் போல் அல்லாமல், தமிழகத்தில் நிலையான அரசாங்கத்தை ஏற்படுத்திய மக்கள், நன்றிக்கு உரியவர்கள் ஆவர்.

ஆட்சிக்கு வரும் கட்சி கொள்கையில் வேறுபாடு கொண்டதாக இருந்தாலும், மக்களாட்சியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சி ஆட்சிக்கு வருவதை வரவேற்கவேண்டும்.

தி. மு. கழகம் எதிர்க் கட்சியாக இருந்து, சட்டமன்றத் தேர்ச்சி பெற்ற கட்சியாகும். கழகம் திறமையுடனும், மனநிறைவு அளிக்கும் விதத்திலும் இப்போது ஆட்சி செய்கிறது.

அறிஞர் அண்ணா அவர்கள், எதிர்க் கட்சிகளையும் மதித்துச் சிறப்பாக ஆட்சி செய்கிறார்; அவருடன் மற்ற எதிர்க் கட்சிகளும் மக்களும் ஒத்துழைப்பாக இருந்து, ஆட்சி சிறக்க உறுதுணையாக இருக்கவேண்டும்."

### அமைச்சர் மதியழகன்

உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இப்போது ஏற்பட்டிருக்கும் மாற்றம் ஒரே நாளில் ஏற்பட்டதும் இல்லை — இயல்பான விலை கொடுத்துப் பெற்றதும் இல்லை,

எத்தனையோ—இன்னுயிர்களைக் காணிக்கையாக்கி—காராக்கிரகத்தில் எத்தனையோ பேர் துன்புற்று அவதிப்பட்டு வாலிப வசந்த காலத்தை இழந்து—சொத்து சுகங்களை இழந்து—இந்த நாட்டுக்காக ஏற்படுத்திய மாறுதல்தான் கழகம் ஆட்சிக்கு வந்திருப்பது!

(4-ம் பக்கம் பார்க்க)

## 'ஆறிக் கொண்டிருக்கும் சிரங்கைக் கிளறினால் மேலும் புண்ணாகும்'

### 'பைல்' எரிப்புப் பற்றி அண்ணா அறிவுரை

சென்னை, சூன் 30—

"உடலில் ஏற்பட்ட சிரங்கு ஆறும் நேரத்தில், மீண்டும் கிளறினால் மேலும் புண்ணாகும்; எனவே, இந்தி எதிர்ப்பு சம்பந்தமான 'பைல்'களை, முன்னாள் முதலமைச்சர் எரித்தது குறித்து மீண்டும் பேசவேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

"முன்னாள் முதலமைச்சரைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தும் யோசனை ஏதும் கிடையாது; அத்தகைய நடவடிக்கையில் அரசு ஈடுபடாது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில், தேர்தல்—கவர்னர் சம்பந்தமான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களுக்குப் பதிலளித்துப் பேசுகையில் தெளிவுபடுத்தினர். அவர் மேலும் கூறியதாவது:—

"இந்தி எதிர்ப்பு சம்பந்தமான 'பைல்'களை எரித்தது சம்பந்தமாகப் பேசுவது விரும்பத்தகாதது; ஏனெனில், அது, காங்கிரசுக்காரர்களுக்குப் பலவீனமான இடமாகும்!

இது சம்பந்தமாக சட்டப் பிரச்சினையை ஆராயவில்லை. நியாயப் பிரச்சினையின்படி அது முற்றிலும் தவறானது—தேவையற்றது—நியாயமற்றது!

"இந்தி எதிர்ப்பு சம்பந்தமான பைல்கள் எரிக்கப்பட்ட பிரச்சினையில் சட்டப்படி இரு பக்கங்களிலும் வாதாடலாம். இந்தப் பிரச்சினையைச் சட்ட நிபுணர்களிடம் அனுப்பப்பட்டு—அவர்களிடமிருந்து இரண்டுவிதமான கருத்துக்கள் வந்துகொண்டிருக்கின்றன.

"முன்னாள் முதல்வர்மீது நடவடிக்கை எடுப்பதற்காக இப்படிச் செய்யவில்லை; இது சுவையான பிரச்சினை என்பதால், இரண்டு தரப்புக் கருத்துக்களையும் அறிந்துகொள்ளலாம் என்பதற்காகக் கருத்துக்கள் கேட்கப்பட்டன.

முன்னாள் முதலமைச்சரைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தவேண்டும் என்று கோரப்பட்டது; அவ்வளவு பெரிய குற்றம் செய்த பட்நாயக்கையே நிறுத்தமுடியாமல் போய்விட்டது என்று பத்திரிகையில் எழுதுகிறார்கள்.

நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அப்படி ஒன்றும் செய்துவிடவில்லை. ஏதோ பதவியிலிருந்து விலகுகிற நேரத்தில்—ஒருவேலையும் இல்லாமல்—'அதையாவது செய்யலாம்' என்று கையில்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

## மாவட்டங்கள் தோறும் 'சீரணி'

### கட்சி சார்பற்று இயங்கும்— சிறப்பு மிக்க பணிகள் ஆற்றும்

### முதலமைச்சர் அண்ணா விளக்கம்

திருச்சி, சூன் 30—

"தமிழகத்தில் அமையவிருக்கும் 'சீரணி' கட்சி சார்பற்ற பொது நிறுவனமாகும். நல்ல ஆர்வமுடைய பொது மக்கள்—எல்லா அரசியல் கட்சிகளையும் சார்ந்த உறுப்பினர்கள்—மாணவர்கள் — குடிமக்கள் அனைவரும் அந்தச் சீரணியில் சேர்ந்து பணியாற்ற அழைக்கப்படுவார்கள். அவர்கள், தங்கள் ஓய்வு நேரத்தில் சில மணி நேரத்தைத் தன்னலப் பற்றின்றிப் பணிபுரியவேண்டும்; சமுதாயச் சேவைக்கான விருப்ப ஆர்வத்துடன் தொண்டாற்ற வேண்டும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், மேல் அணைக்கட்டில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்கள்.

"சீனாவில் செங்காவல் படை அமைந்திருப்பதுபோன்று தி.மு. கழகம் சீரணி அமைக்கப் போகிறது" என்றும், "தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் சீரணியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்" என்றும் காங்கிரசார் தவறான முறையில் பிரச்சாரம் செய்து வருவது நினைவுகூரத்தக்கது.

"சீனாவில் உள்ள செங்காவல் படைபோல் சீரணி அமையாது" என்று கூறி, 'சீரணி' மீது காங்கிரசாருக்கு இருந்த அச்சத்தை அகற்றும் வகையில் 'சீரணி'யின் நோக்கம் பற்றி வலியுறுத்தி முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேசினார்கள்.

முதலமைச்சர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தியா போன்ற பெரிய நாட்டில்—அதுவும் ஒவ்வொருநாளும் மக்கள் தொகை பெருகிக் கொண்டிருக்கும் நாட்டில்—தேசிய வளர்ச்சித் திட்டங்களை மக்கள் ஒத்துழைப்புடன் செயல்படுத்தியாகவேண்டும்.

"ஒவ்வொரு மாவட்டத்திலும் 1,000 பேர் கொண்ட 'சீரணி' அமைக்கப்படும்.

"அந்த மாவட்டச் 'சீரணி' பல குழுக்களாகப் பிரிக்கப்படும்; ஒவ்வொரு குழுவிற்கும் தலைவர் உண்டு. சாலைகளைச் செம்மை செய்தல்—குளம், குழாய்களைப் பழுது பார்த்தல்—முதியோருக்குக் கல்வி புகட்டுதல்- தரிசாகக் கிடக்கும் நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டுவருதல் போன்ற பணிகளை அந்தச் 'சீரணி'க் குழுக்கள் செய்து கொடுக்கும்.

"இந்தச் சீரணி'த் திட்டத்திற்காகத் தனி உயர் அலுவலர், அலுவலில் அமர்த்தப்பட்டுள்ளார். எல்லா மாவட்டங்களிலும், அமைச்சர்கள் விரைவில் 'சீரணி'யைத் துவக்கிவைப்பார்கள்."

### இந்தி எதிர்ப்பு....

## 'உணர்ச்சியை மதித்து அரசியல் சட்டத்தைத் திருத்துக'

### இந்திரா காந்திக்கு அண்ணா அறிவுறுத்தல்

திருச்சி, சூன் 30—

"இந்தி மொழி பேசாதோர் மீது அந்த மொழி திணிக்கப்பட்டால், தமிழகம் அதைக் கடுமையாக எதிர்க்கும்; தமிழர்கள் மட்டுமன்றி இந்தி பேசாத பிற மாநில மக்களும் இந்தியை எதிர்ப்பார்கள்"

என்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், மத்திய அரசுக்கு விழிப்பூட்டி வலியுறுத்தினர்கள்.

திருவெறும்பூர் கொதிகலன் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் சார்பில், முத்தமிழ் மன்றத்தார், முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு வரவேற்பு அளித்தனர்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தி பேசாத மக்களின் உணர்ச்சிகளைத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி மதித்து, ஆங்கிலம்தொடர்ந்து ஆட்சிமொழியாவதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்த ஆவன செய்வார் என நம்புகிறேன்.

"முன்பு இந்தி மொழி திணிக்கப்பட்டபோது, மக்களில் ஒரு பகுதியினர்தான் இந்தித் திணிப்பை எதிர்த்தனர்; இனிமேல், பொதுமக்களுடன் மாநில அரசும் சேர்ந்து இந்தித் திணிப்பை எதிர்க்கும் என்பதை மத்திய அரசு உணர்ந்துகொள்ள வேண்டும்."

# தரைக்கடியில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்தும் திட்டம்

## தமிழகத்தில் நான்கு பகுதிகளில் ஆய்வு

### 'சென்னைப் பகுதி ஆய்வில் வெற்றிகரமான முன்னேற்றம்'-- சட்டமன்றத்தில் அமைச்சர் மு. கருணாநிதி தகவல்

சென்னை, ஜூன் 30—

"தமிழகத்தில் தரைக்கடியில் உள்ள நீர் வளத்தை வேளாண்மைக்குப் பயன்படுத்தும் வகையில், ஐ. நா. தனி நிதியுதவியுடன் 4 இடங்களில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னைச் சுற்றுப்புறப் பகுதிகளிலும், பாலாற்றுக் கழிமுகப் பகுதியிலும், நெய்வேலிப் பகுதியிலும், காவிரிக் கழிமுகப் பகுதியிலும் இவ்வாராய்ச்சியை நடத்தத் திட்டமிடப்பட்டு முதலில் சென்னைச் சுற்றுவட்டாரப் பகுதியில் ஆய்வுப் பணிகள் வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கின்றன. அடுத்து மற்ற மூன்று பகுதிகளிலும் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்"

என்று, இன்று சட்டமன்றத்தில், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அறிவித்தார்.

கே. விநாயகம் :— "சென்னைச் சுற்று வட்டாரப் பகுதியில் நடந்த ஆய்வு மூலம் சென்னை நகர மக்களுக்கு ஏதேனும் பயன் ஏற்படுமா ?"

பதில் :—"இந்த ஆய்வுப் பணி 1970-ம் ஆண்டு வாக்கில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்னைச் சுற்று வட்டாரப் பகுதியான ஆரணி—கொத்தலை ஆற்றுப் படுகைகளில் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் 7 இலட்சம் காலன் தண்ணீர் மணலியில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்குக் கிடைக்க ஏற்பாடாகியுள்ளது. இந்தத் தொழிற்சாலைக்கு 35 இலட்சம் காலன் தண்ணீரும், இரசாயன உரத் தொழிற்சாலைக்கு 70 இலட்சம் காலன் தண்ணீரும் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்தத் தேவை முழுவதும் நிறைவு செய்யப்பட்ட பின், சென்னைநகரின் குடிநீர்த் தேவையும் நிறைவு செய்யப்பட வழியிருக்கிறது என்றும், இத்திட்டம் வெற்றிகரமாக முடிவடையும் என்றும் திட்ட அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்."

மேலும் பல துணைக் கேள்விகட்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்ததாவது :—

"சென்னைச் சுற்று வட்டாரப் பகுதி ஆய்வு முடிவடையும் நிலையில் உள்ளது. இத்திட்டத்துக்கு ஐ.நா. நிறுவனம் அளிக்கும் உதவிக்கு எந்தவித நிபந்தனையும் கிடையாது. ரூ. 123 இலட்சம் ஐ.நா. அளிக்கிறது. நாம் அளிக்கக்கூடிய ரூ. 85 இலட்சத்தில் அலுவலர் ஊதியம் ரூ. 11 இலட்சம் போக ரூ. 74 இலட்சம்தான் அளிக்கிறோம்,"

# தமிழகத்தில் 375 ஊராட்சி ஒன்றிப்புகள்

சென்னை, ஜூன் 30—

"திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிப்பை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று (திருச்சிராப்பள்ளி தெற்கு) மாவட்ட வளர்ச்சி மன்றம் செய்த பரிவுரையை அரசு ஏற்க இயலவில்லை"

என்று உள்ளாட்சித் துறையமைச்சர் திரு. முத்துசாமி, சட்டமன்றக் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் துணைக் கேள்விகட்குப் பதிலளித்ததாவது :—

"மத்திய அரசு வரையறுத்துள்ளபடி தமிழகத்தில் 375 ஊராட்சி ஒன்றிப்புகள் செயலாற்றி வருகின்றன; இதற்கு மேல் புதிதாக ஒன்றை உருவாக்க இயலாது. சில ஒன்றிப்புகளில் அதிகப்படியான ஊராட்சி மன்றங்கள் இருந்தால் அவற்றைப் பிரித்து வேறு ஒன்றிப்பில் இணைப்பது பற்றிப் பரிசீலிக்கலாம்."

# ஏகபோக ஆதிக்கம் இனியும் நீடிப்பதா?

## ஏழைகளின் நலத்திற்கே கூட்டுறவுச் சங்கம் இயங்க வேண்டும்

### சட்ட அமைச்சர் செ. மாதவன் விளக்கம்

சென்னை, ஜூன் 29—

"கூட்டுறவு இயக்கத்தில் ஏகபோக ஆதிக்கம் இருந்துவருகிறது; 'இன்னும் இந்த இயக்கம், ஏழைகளிடம் செல்லவில்லை' என்று தமிழக அரசு கருதுகிறது. ஏழைகளின் நலத்திற்காக இயங்கும் வகையில்—கூட்டுறவுச் சங்கம் செயல்படும் வகையில் நமது பிரச்சாரம் இருக்கவேண்டும்.

"அரசையோ பாங்கிகளையோ நம்பித்தான் கூட்டுறவுச் சங்கம் இருக்க வேண்டும் என்ற நிலைமை கூடாது. கூட்டுறவுச் சங்கம் என்றாலே தன் இச்சையாக இயங்குவது என்பதுதான் பொருள் ; ஆகவே, தன் இச்சையாக அந்தச் சங்கங்கள் இயங்கும் வகையில் இனி செயல் முறைகள் மேற்கொள்ளப்படும்.

"கூட்டுறவுச் சங்க சட்டத் திட்டங்களில் இப்போதுள்ள குறைபாடுகளை நீக்க விதிமுறைகளில் என்னென்ன திருத்தங்கள் செய்யலாம் என்பது பற்றி ஆலோசனை கூற ஒரு தனிக் குழுவை அரசு அமைக்கும் ; அதன் சிபாரிசின் அடிப்படையில் தேவையான மாற்றங்கள் செய்து ஒரு புது மசோதாவை சட்டமன்றத்தின் பரிசீலனைக்கு வைத்து, பிறகு அமுல் செய்ய அரசு எண்ணியுள்ளது"

என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் செ. மாதவன், சட்டமன்றத்தில், கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் தெளிவுபடுத்தினார். அவர் மேலும் அதுபற்றி விளக்கியதாவது :—

#### நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம்!

"இந்த இயக்கத்தில் காணப்படும் புகார்கள், ஊழல்கள் முதலிய குற்றங்களைக் குறிப்பிட்டுச் சொன்னால் இந்த அரசாங்கம உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயங்காது.

"சில அதிகாரிகளே குற்றங்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள்' என்று புகார் கூறப்பட்டது ; அத்தகைய குற்றம் செய்யும் அதிகாரிகளைக் குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகளை ஆதரித்துத்தான் பேசவேண்டும் என்பது இந்த அமைச்சரவையின் சரித்திரம் அல்ல.

#### கடன் மறுக்கப்படும் நிலையை மாற்றுவோம்!

சிலர் கடன் செலுத்தவில்லை பன்பதால், சங்கத்தைச் சேர்ந்த மற்றவர்களுக்கும் கடன் மறுக்கப்படும் இப்போதுள்ள நிலைமையை மாற்ற அரசாங்கம், ரிசர்வ் பாங்கியுடன் பேசி விவசாயிக்குச் சாதகமான நல்லதொரு முடிவு எடுக்கும்.

விவசாயிகளுக்கு உரிய காலத்தில் கடன்கள் முதலியவைகள் கிடைக்க முடியாமல் போவதற்கு என்ன காரணம் என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து சீர்செய்து நடவடிக்கை எடுக்கும்."

எங்கெங்கே இயலுமோ அங்கெல்லாம் கூட்டுறவு சங்கங்களின் மூலமும், அது முடியாத இடங்களில் அந்தந்த மாவட்டக் கலெக்டர் குறிப்பிடும் நிறுவனங்களின் மூலமும் 'கார்டு' முறையில் விவசாயிகளுக்கு உரம் வழங்க அரசாங்கம் எண்ணியிருக்கிறது."

# 'தவறு செய்வோருக்கு வாழ்க்கையில் வழிகாட்டும்வகையில் சிறைகளைச் சீர்திருத்துவோம்'

## 'கொடுமைகள் நடைபெற இடமிருக்கக்கூடாது-- சட்ட அமைச்சர் செ. மாதவன் விளக்கம்

சென்னை, ஜூன் 29—

"சமுதாயத்தில் தவறு செய்வோருக்கு வாழ்க்கையில் வழிகாட்டும் வகையில் சிறைச்சாலைகள் இயங்க வேண்டும் என்ற இலட்சியத்தை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது!

"சிறைச்சாலைகளைச் சீர்திருத்தச்சாலைகளாக்குவதுதான் அரசின் கொள்கையாகும். சிறை சென்றவர்கள் சீர்திருந்தி, நல்லமுறையில் வெளியே வருவதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும்.

"'அரசியல் கைதிகளுக்கு மதிப்பு அளிக்கப்பட வேண்டும்; அவர்களைத் தகுந்த மரியாதையுடன் நடத்த வேண்டும் ; பொதுவாகக் கைதிகளை அடிமைபோல் நடத்தக்கூடாது' என உத்தரவிட்டிருக்கிறோம்.

"கைதிகளைக் கொடுமைப்படுத்துவது — கைவிலங்கு போடுவது—மிருகத்தனமாக அடிப்பது போன்றவை, சர்வாதிகார நாடுகளில்தான் நடக்கும் ; சனநாயக ஆட்சியில் நடக்கக்கூடாது ; அப்படிக் கைதிகள் கொடுமையாக நடத்தப்படுவதாகப் புகார் கூறப்படுமானால், கடும் நடவடிக்கை எடுப்போம்"

என்று, சட்டமன்றத்தில், சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன், நீதி நிர்வாகம்—சிறைச்சாலை—பத்திரப் பதிவு மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் விளக்கினார்.

### கைதிகளுக்குச் சலுகை

திட்டப் பகுதிகளில் கைதிகளுக்கு வேலையளித்து, அவர்களுக்கு ஊதியம் கிடைக்கவும், ஒழுங்காக வேலை செய்வதைப் பொறுத்து தண்டனைக் காலத்தில் தள்ளுபடி அளிக்கவும் அரசு ஏற்படாது. செய்து வருகிறது. அப்பணியில் அவர்களை உடனடியாகப் பயன்படுத்தும் முயற்சியில் அரசு முழுமூச்சாக ஈடுபடும்.

### உணவு-உடையில் மாற்றம்

கைதிகளுக்குத் தரப்படும் உணவையும் மாற்றியமைக்கலாம் எனக் கருதுகிறோம்.

கைதிகளை அவமானப்படுத்தாத அளவில், புதிய உடைகள் தரத் திட்டமிட்டிருக்கிறோம்.

சிறையிலிருக்கும் அனைவருக்கும் ஒரேமாதிரியான வசதி தருவது பற்றி அரசு ஆலோசிக்கும்."

# நகராட்சி ஆணையர்களாக தாழ்த்தப்பட்ட வகுப்பினர்

சென்னை, ஜூன் 30—

"தற்போது தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த 8 பேர் நகராட்சிமன்ற ஆணையர்களாக உள்ளனர்"

என்று சட்டமன்றத்தில், திரு. கே. பி. எஸ். மணியன் கேள்விக்கு அமைச்சர் முத்துசாமி பதிலளித்தார்.

கேள்வி :—"மொத்தம் எத்தனை ஆணையர்கள் இருக்கின்றனர் ? தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டபடி, 16 சதவிகித அளவுக்குப் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறதா ?"

பதில் :—"மொத்தம் 84 ஆணையர்கள் இருக்கின்றனர். இந்தப் பதவி, விகிதாச்சார அடிப்படையில் கொடுக்கப்படுவதில்லை ; உரிய தகுதிப்படியும், விதிகளின்படியும்தான் அளிக்கப்படுகிறது. சிலர் உத்தியோக உயர்வு மூலமும், சிலர் நேரடியாகவும் நியமிக்கப்படுகிறார்கள்."

# ஒன்றிப்பு ஆணையர் பதவி ஒழிக்கப்படமாட்டாது

## உள்ளாட்சி அமைச்சர் விளக்கம்

சென்னை, ஜூன் 30—

"ஊராட்சி ஒன்றிப்பு ஆணையர்களையும், வளர்ச்சித்துறை அதிகாரிகளையும் எடுத்துவிடும் எண்ணம் இல்லை ; வேறு சில அதிகப்படியாக உள்ள அதிகாரிகளை நீக்குவது பற்றித்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது ; வளர்ச்சித் துறையில் உள்ள கிராம சேவிகாக்களை வேறு துறைக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று செய்தித்துறையமைச்சர் ஓர் குறிப்புக் கொடுத்திருக்கிறார் ; இதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது"

என்று உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. முத்துச்சாமி, சட்டமன்றக் கேள்வி நேரத்தில் விளக்கமளித்தார்.

மேலும் அவர் சில கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது :—

"தமிழக அரசின் தனி அதிகாரி மத்தியப் பிரதேசத்திற்குச் சென்று அங்கு வளர்ச்சித்துறை இயங்கும் விதம் பற்றி கண்டறிந்து வந்திருக்கிறார். அவருடைய அறிக்கை கிடைத்ததும், எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூட்டி அதனைப் பரிசீலித்து, தேவையான மாற்றங்களைச் செய்யலாம் என்று இருக்கிறோம். ஊராட்சி ஒன்றிப்புகளை ஒழித்துவிடுவது என்று முடிவு செய்துவிடவில்லை. அதுபற்றி ஆலோசனை செய்யப்படும்."

# ஒழுக்கக் கண்காணிப்பு விடுதி

## சென்ற ஆண்டில் 1230 பெண்கள் அனுப்பப்பட்டனர்

சென்னை, ஜூன் 30—

"1966-ஆம் ஆண்டில் பெண்கள் ஒழுக்கக் கண்காணிப்பு விடுதிகளுக்கு 1,230 பெண்கள் அனுப்பப்பட்டனர். இந்த இல்லங்களுக்கு வழக்கு மன்றத் தண்டனை பெற்ற பெண்களும், நீதிபதிகளால் அனுப்பி வைக்கப்படும் பெண்களும் வருகிறார்கள் ; இந்த இல்லத்திலிருந்து வெளியேறு முன்பே திருமணம் செய்து கொள்ள விரும்பினால் அரசு தக்க உதவிகளை அளிக்கிறது"

என்று சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன், சட்டமன்றக் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

# சீன ஏவுகணை ஆபத்து

## எல்லைப் பாதுகாப்பைத் தீவிரப்படுத்துகிறது இரஷ்யா

சீனா நீர்வளிக் குண்டை வெடித்துப் பார்த்துவிட்டதால், விரைவில் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் முதல் ஏவுகணையையும் விட்டுப் பார்க்கக்கூடும் என்ற கருத்தில் சோவியத் யூனியன், சீனாவுடனுள்ள தனது எல்லையின் பாதுகாப்பைத் தீவிரப்படுத்துகிறது.

அது, தனது நான்காயிரம் மைல் நீள எல்லையில் உள்ள போர் முக்கியத்துவம் வாய்ந்த முனைகளில் படை பலத்தைக் குவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அம்பிகாபுரத்தில் அரசினர் உயர்நிலைப் பள்ளி

## அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் திறந்துவைத்தார்

கடந்த பல ஆண்டுகளாகப் பொன்மலையை அடுத்த அம்பிகாபுரத்தில், 'அம்பிகா உயர்நிலைப் பள்ளி' என்ற பெயரில் தனியாரால் நடத்தப்பட்டுவந்த பள்ளியை பள்ளி நிர்வாகத்திற்கும்—பள்ளி அமைந்திருந்த நிலத்தின் உரிமையாளருக்கும் ஏற்பட்ட தகராறின் விளைவாகக் கடந்த கல்வி ஆண்டோடு நிர்வாகத்தினர் மூடிவிட்டனர்.

இதனால் இதில் படித்துவந்த மாணவ, மாணவிகள் சுமார் 600 பேரும், ஆசிரியர்—ஆசிரியரல்லாத ஊழியர்களும் அல்லற்பட நேரிட்டது.

இந்நிலையை, அம்பிகாபுரம் அண்ணா மன்றத் தோழர்களும், ஊர்ப் பொதுமக்களும், மேலக்கற்கண்டார்கோட்டை தி. மு. கழகத் தோழர்களும் கலந்து பேசி பள்ளியை அரசினரே ஏற்று நடத்த ஆவனசெய்யவேண்டி, திரு. பராங்குசம் அவர்களைச் செயலாளராகக் கொண்ட ஒரு குழு அமைத்தனர். அக்குழுவினர் தமிழக முதல்வரையும், கல்வி அமைச்சரையும் சென்னையில் சந்தித்து மீண்டும் பள்ளி தொடங்கி நடத்த ஆவன செய்யக் கேட்டுக்கொண்டனர்.

முதலமைச்சரும், கல்வி அமைச்சரும் குழுவினரின் கோரிக்கையை அனுதாபத்துடன் கேட்டு, அம்பிகாபுரத்தில் அரசினர் உயர்நிலைப் பள்ளியைத் துவக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி கல்வி அதிகாரிகளுக்கும், மாவட்டக் கலெக்டருக்கும் உத்தரவு பிறப்பித்தார்கள். அதன்படி அதிகாரிகளும் தக்க நடவடிக்கை எடுத்து பள்ளியைத் துவக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர்.

14—6—67 காலை 8-மணியளவில் மாவட்டக் கலெக்டர் தலைமையில் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், பள்ளியைத் துவக்கிவைத்தார்.

கல்வியமைச்சர் தமது துவக்க உரையில் கல்வியின் சிறப்பைக் குறித்தும், கல்வியைப் பரப்ப அரசினர் எடுக்கும் நடவடிக்கைகளை விளக்கியும், வசதிபடைத்தோர் கல்வி நிலையங்களுக்கு உதவவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் அரியதோர் சொற்பொழிவாற்றினார்.

பின்னர் திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் அன்பில் தர்மலிங்கம் சிறப்புரை ஆற்றினார்.

விழாத் துவக்கத்தில், விழாவிற்கு வருகைதந்திருந்தோரை வரவேற்றும், பள்ளியை மீண்டும் துவக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை விவரித்தும் திரு. பராங்குசம் உரையாற்றினார்.

விழாவிற்குக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் து. ப. அழகமுத்து, ஆர். நாகசுந்தரம், முத்துச்செல்வன் பி.ஏ., எஸ். கே. வடிவேலு, சுவாமிநாதன் (காங்), திருச்சி நகர தி. மு. க. செயலாளர் அ. நடராகன், மே. க. கோட்டை தி. மு. க. செயலாளர் கணேசன், பொன்மலைப்பட்டி தி. மு. க. செயலாளர் முருகையன், பொன்மலை ஊராட்சி மன்றத் தலைவர் கோ. இராமானுசம், பொன்மலை இரயில்வே தொழிற்சங்கத் தலைவர்கள் எல். கிருஷ்ணமூர்த்தி, சங்கிலிமுத்து ஆகியோரும், மற்றும் மாவட்டக் கல்வி அதிகாரிகளும், இரயில்வே அதிகாரி டெபுடி சீப் மெகானிகல் எஞ்சினீயரும் வருகைதந்து சிறப்பித்தனர்.

பல்வேறு அமைப்புகளின் சார்பாக அமைச்சருக்கும், மற்றையோருக்கும் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

## கூட்டுறவுப் பண்டகசாலை தேர்தலில் தி.மு.க. வெற்றி

23—6—66-ல் நடைபெற்ற தென்னிந்திய கூட்டுறவு நூற்பு ஆலைத் தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலை—சிக்கன நாணயச் சங்க இயக்குநர்கள் தேர்தலில் மொத்தம் நான்கு இடங்களுக்கு காங்கிரசு - கம்யூனிஸ்டுத் தொழிற் சங்கங்கள் கூட்டாக நான்கு வேட்பாளர்களையும், தி.மு.க. தொழிற் சங்கம் 4 வேட்பாளர்களையும் நிறுத்தியதில் தி.மு.க. தொழிற் சங்கத்தைச் சார்ந்தவர்கள் மூவரும், கூட்டுக் கட்சி வேட்பாளர் ஒருவரும் வெற்றி பெற்றனர்.

கூட்டுக் கட்சி வேட்பாளர் மூவர் படுதோல்வியடைந்தனர்.

வெற்றிபெற்றவர்கள் ; பண்டகசாலை இயக்குநர்கள் :—

எஸ். பி. சின்னசாமி (தி.மு.க.;) எம். எஸ். கோஸ்முகமது (தி.மு.க.); டி. சுப்பிரமணியன் (வ. கம்யூ.); சி. ஜேம்ஸ் (காங்கிரசு).

சிக்கன நாணயச் சங்க இயக்குநர் தேர்தலில் இரு தி.மு.க. வேட்பாளர்களும், கூட்டுக் கட்சி வேட்பாளர் ஒருவரும் வெற்றி பெற்றனர் ; விவரம் :—

ப. பழனியப்பன் (இ. கம்யூ.); பெ. பாலகிருஷ்ணன் (தி.மு.க.); வேலாயுதம் (காங்கிரசு); வெயிலானந்தம் (தி.மு.க.).

## கோவை மாவட்டப் பொதுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

25-6-67-ல், கோவை பொதுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க உறுப்பினர் கூட்டம், பி. பெரியசாமி தலைமையில் நடைபெற்றது.

தலைவர், 1967-ம் ஆண்டிற்குத் தன்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தமைக்கு நன்றிகூறி, சங்கத்தின் வளர்ச்சியைப் பற்றியும் நிர்வாகிகள் அனைவரும் கட்டுப்பாடாகவும் கடமை உணர்ச்சியுடனும் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் சங்க நடவடிக்கைகளைப் பற்றியும், தொழில் நீதிமன்றத்தில் உள்ள தொழிற் தகராறுகளைப் பற்றி விளக்கமாகவும் கூறினார்.

பின்பு சில தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

### துணைக் குழுத் தேர்தல்

1967-ம் ஆண்டிற்கு, ராஜ ஸ்ரீ பவுண்டரி துணைக் குழுவிற்கு தோழர் மு. கோவிந்தராசு தலைமையில் கீழ்க்காணும் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : கே. சென்னியப்பன் ; செயலாளர் ; சி. வெள்ளிங்கிரி ; துணைச் செயலாளர் : ஏ. திருமலைச்சாமி ; பொருளாளர் : ஆர். நஞ்சப்பன் ; மாவட்டப் பிரதிநிதி : என். பெரியசாமி.

## சென்னை 97-வது வட்டம் அண்ணா அறிவு வளர்ச்சிமன்றம்

சைதை 97-வதுவட்டம் அண்ணா அறிவு வளர்ச்சி மன்ற நிர்வாகிகள் தேர்தல் வட்டத் தி.மு.க.செயலாளர் ஓய். எம். சேகர் தலைமையிலும் பகுதிச் செயலாளர் சைதை சம்பந்தம் முன்னிலையிலும் நடைபெற்றது ; தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம் :—

தலைவர் து. கோவில்மணி ; துணைத் தலைவர் த. பஞ்சாட்சரம் ; செயலாளர் பா. கிருட்டினமூர்த்தி; துணைச் செயலாளர் மா. சுப்பிரமணியன் ; பொருளாளர் மாணிக்கம். செயற்குழு உறுப்பினர்கள் : பார்த்தசாரதி, ரங்கசாமி, சுப்பராயலு, வெங்கடேசன், இராசகோபால், பூபாலன், கணேசன், தர்மலிங்கம், கிருஷ்ணன், மா. குருமூர்த்தி, இனியத் உசேன், பாலாஜி ராவ், வடிவேலு, குப்புசாமி, தோவாமொழியார், சுப்பிரமணி.

## சென்னை 86-வது வட்ட தி. மு. கழகக் கூட்டம்

27—6—67-ல், சென்னை 86-வது வட்ட தி. மு. க. சார்பில் மயிலாப்பூர் கீழ மாடவீதியில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது ; தோழர் கே. இராமலிங்கம் தலைமைவகித்தார்.

தமிழகச் சட்ட அமைச்சர் செ. மாதவன், ந. தர்மலிங்கம் எம்.எல்.ஏ., இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., டி. கே. கபாலி எம்.சி., எஸ். வி. வேலு, புலவர் புதுமைப்பித்தன் ஆகியோர் பேசினர்.

## தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் சங்கக் கிளைக் கூட்டங்கள்

### கோவை

தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் சங்க கோவை கிளையின் சார்பில் பைகாரா மத்திய அலுவலகத்தில் 20—6—67-ல் கூட்டம் நடைபெற்றது ; ஏ. கிருஷ்ணசாமி தலைமைவகித்தார் ; மு. துரைராசு வரவேற்றார்.

சு. மோகனதாசு, மு. துரைராசு, எஸ். சுப்பிரமணியன், ஜே. ஏ. பழனிசாமி ஆகியோர் பேசினர்.

### சேலம்

சேலம் கிளையின் சார்பில் வருவாய்த்துறை அலுவலகக் கட்டிடத்தில் 18—6—67-ல் கூட்டம் நடைபெற்றது ; டி. கோவிந்தசாமி தலைமைவகித்தார் ; மகபூப்பாட்சா வரவேற்றார்.

ஏ. கிருட்டினசாமி, இரா. வெள்ளிங்கிரி ஆகியோர் பேசினர்.

### பொள்ளாச்சி

பொள்ளாச்சிக் கிளையின் சார்பில் 13-6 67-ல் இராமலிங்கராவ் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் அ. கிருட்டினசாமி, இர. வெள்ளிங்கிரி ஆகியோர் பேசினர். தோழர் பேராநாய்க்கன் நன்றி கூறினார்.

### தாராபுரம்

தாராபுரம் கிளையின உறுப்பினர் கூட்டம், 12—6—67-ல் நடைபெற்றது; தோழர் அசக் ரசூல் தலைமை வகித்தார். தோழர்கள் மோகனராசு, மு. துரைராசு, அனுமந்தராயன், தண்டபாணி, பாலுசாமி, அந்தோணி செல்வராசு, பிலிப் வேதமணி ஆகியோர் பேசினர்.

செயற்குழு தேர்தல் தோழர் மு. துரைராசு தலைமையில் நடைபெற்றது ; பாலுசாமி செயலாளராகவும், தண்டபாணி துணைச் செயலாளராகவும், அந்தோணி செல்வராசு பொருளாளராகவும், பிலிப் வேதமணி, துரைரர்சு ஆகியோர் பொதுக்குழு உறுப்பினர்களாகவும், மற்றும் எழுவர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தோழர் அனுமந்தராயன் நன்றி கூறினார்.

## உடுமலை தி. ப. தொ. மு. சங்கத்தின் சாதனை

கடந்த 24—6—67 முதல் வேலையிழந்துவாடும் உடுமலை சிம்ப்ளக்ஸ் மிசின் டூல்ஸ் தொழிலாளர்களுக்காக உடுமலை திராவிடப் பஞ்சாலை தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் நடவடிக்கை எடுத்தது.

தொழிற்சாலை மூடப்பட்டதால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டார்கள். மூன்று நான்கு மாதங்களாக நாட்கூலிகளாகத் தொழிலாளர்கள் பணி செய்தனர்.

உடுமலை துணைத் தொழில் ஆய்வர் முன்னிலையில் 18—6—67-ல் ஒப்பந்தம் ஏற்பட்டது. தொழிற்சாலையை மூடிவிடுவதால் தொழில்லாளர்கட்கு ரூ. 1,400 இழப்பீட்டுத் தொகை அளிக்கவேண்டும் என்பதை உரிமையாளர்கள் சார்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒப்பந்தத்தில் நிறுவனச் சார்பில் இராசுவும் சங்கச் சார்பில் ஏ.எஸ். மணியும் கையொப்பமிட்டனர்.

## சென்னை 9-வது வட்டம் தாளமுத்து நடராசன் முன்னேற்ற மன்றம்

சென்னை—மீனாட்சியம்மன் பேட்டை தாளமுத்து நடராசன் முன்னேற்ற மன்றத்தின் நிர்வாகிகள் தேர்தலை, தோழர் சம்பந்தன் ஆணையாளராக இருந்து நடத்திவைத்தார் ; தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம் :—

அவைத் தலைவர் : ஏ. வி. முனுசாமி ; செயலாளர் : சுப்பிரமணியன் ; துணைச் செயலாளர் : உலகநாதன் ; பொருளாளர் : சகாதேவன்.

## தொழிற் சங்கச் செய்திகள்

### சாரதா ஆலை

கோவை மாவட்ட தி.ப.தொ.மு. சங்க சாரதா மில் துணைக் குழுத் தேர்தலை கே.வி. பழனிசாமி ஆணையாளராக இருந்து நடத்திவைத்தார். தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம் :—

தலைவர் : கே. பழனிசாமி ; துணைத் தலைவர் : எஸ். பழனிசாமி; செயலாளர் : எம். வி. எஸ். மணி ; துணைச் செயலாளர் : சுப்பிரமணியம் ; பொருளாளர் : அரங்கசாமி.

### ஈரோடு நடேசர் ஆலை

ஈரோடு நடேசர் ஆலை துணைக் குழுத் தேர்தலை, சு. கிருட்டினன் ஆணையாளராக இருந்து நடத்திவைத்தார் ; தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம் :—

தலைவர் : சு. கிருட்டினசாமி ; துணைத் தலைவர் : மா. வெங்கிடாசலம் ; செயலாளர் : சி. பழனிசாமி ; துணைச் செயலாளர் : கு. குமாரசாமி ; பொருளாளர் : மா. இலக்குமணன் ; மாவட்டப் பிரதிநிதிகள் : சு. கிருட்டினசாமி, மா. இலட்சுமணன்.

## சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைமைச் செயற்குழுவின் கூட்டம், 27—6—67 இரவு 7 மணியளவில் தலைவர் தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்றது ; அதுபோது, 30—7—67-ல் தலைமைக் கழக நிர்வாகிகள் தேர்தல் நடத்துவது என்றும், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அவர்களை அழைத்து பொது மாநாடு நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆங்காங்கு கிளைச் சங்கங்கள் அமைக்குமுன் தலைமைச் சங்கத்தின் அனுமதி பெற்ற பின்னரே அமைக்கவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

## ரூ. 65 கோடி செலவில் அணு மின்சார நிலையம்

### இரவு -- பகலாக 6,000 பேர் பணியாற்றுகின்றனர் !

பம்பாய்க்கு வடக்கே 60 மைலில் உள்ள தாராப்பூரில் இந்தியாவின் முதலாவது அணுமின்சார நிலையம் கட்டிமுடிக்கப்படும் கட்டத்தை நெருங்கிவருகிறது.

குறித்த நேரத்தில் அதைக் கட்டிமுடிக்க 6,000 பேர் இரவு பகலாகப் பணியாற்றி வருகின்றனர்.

உலகில் அவ்வகையில் மிகப் பெரிய அணுமின்சார நிலையங்களில் ஒன்றான அது, ரூ. 65 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது.

## தமிழக அலுமினிய தொழிற்சாலை

### இத்தாலி நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவி

சென்னை அலுமினியக் கம்பெனி இரண்டாம் கட்ட விரிவுக்கு இத்தாலியைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று தொழில் நுட்ப உதவியை அளிக்கும்.

சென்னை அலுமினியக் கம்பெனியின் திட்டத்தை மத்திய அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இத்தாலியப் பாங்கி ஒன்று அளிக்க முன்வந்துள்ள அயல் செலாவணிக் கடன் நிபந்தனைகளும் அங்கீகரிக்கப்பட்டுவிட்டன.

இரண்டாம் கட்ட விரிவில் ஆலையின் உருக்கும் திறனை 12,500 டன்னிலிருந்து 25,000 டன்னுக அதிகரிக்கச் சென்னை அலுமினியக் கம்பெனி திட்டமிடுகிறது.

இந்நிறுவனம் தனது அயல் செலாவணிப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக ரூ. 98,40,000 மதிப்புள்ள பொருட்களை ஏற்றுமதி செய்யுமாம்.

1967-ம் ஆண்டு இறுதிக்குள் 400 டன் அலுமினியக் கட்டிகளை ஏற்றுமதி செய்ய அது திட்டமிடுகிறது.

## கவைக்குதவா கதர்த் திட்டம்

### அண்ணா கருத்துக்கு முன்னாள் அமைச்சர் பாராட்டு

"செத்துவிட்ட கதர்த் திட்டத்திற்கு, சென்னை சட்டக் கல்லூரிக்குப் பக்கத்தில் பெருஞ் செலவில் நினைவு மண்டபம் கட்டப்பட இருக்கிறது.

"இந்த வீண் விரயச் செலவை, தமிழக முதமைச்சர் தடுத்து நிறுத்தினால், தமிழக மக்கள் நன்றியறிதலோடு அதை வரவேற்பார்கள் "

என்று முன்னாள் அமைச்சர் எஸ். இராமநாதன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் எஸ். இராமநாதன், தமிழ் நாடு கதர் போர்டில் செயலாளராகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. எஸ். இராமநாதன், கதர்த் திட்டம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடுவதாவது :—

"காந்தியாரின் பெயரைக் கூறி கதர்த் திட்டத்தைப் புகுத்துவது, எதிர்காலப் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதாகும்.

கதர்த் திட்டத்தால் இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சி அடையும் என்பது இயலாததாகும் என்பதைத் தமிழகச் சட்டமன்றத்தில் முதலமைச்சர் வெளிப்படையாகத் தெரிவித்திருப்பது !வரவேற்கத் தகுந்ததாகும்.

இந்தியா ஏழ்மையான நாடு. ஏழை மக்களிடம் வசூலித்த வரிப் பணத்தை, பயன் இல்லாத திட்டத்தில் செலவழித்து வீணாக்குகிறார்கள் !

பசி—பட்டினித் தொல்லையில் சிக்குண்ட மக்களிடம் வரியை வசூலித்து, கதர்த் திட்டத்தைச் செயல்படுத்தும் அலுவலர்கள் விமானங்களில் பயணம் செய்து கோடிக்கணக்கில் பணத்தைப் பாழடிக்கிறார்கள் !

செஞ்சீனா நீர்வளிக் குண்டு வைத்திருக்கும்போது, நாம் 'அம்பர் சர்க்கா'வையும், இராட்டையின் சக்கரத்தையும் வைத்துக்கொண்டு அதனை எதிர்த்து நிற்க இயலுமா ?

'இந்தியாவைத் தொழில்மயமாக்க வேண்டும்' என்று ஊக்கம் செலுத்தி முயன்று வரும் போது, கதர்த் திட்டத்தையும் ஆதரிப்பது வேடிக்கையாகத்தான் இருக்கிறது !

## மர்ம வானொலி நிலையம்

### மாஸ்கோவிடம் விளக்கம் கேட்கிறது இந்திய அரசு

புதுடில்லி, சூன் 30—

'சமாதான, முன்னேற்ற வானொலி' எனப்படும் இரஷ்ய வானொலி நிலையம் ஒன்று இயங்கி வருவதைக் குறித்து மாஸ்கோவிலுள்ள இந்தியத் தூதரகம் சோவியத் அரசிடம் விளக்கம் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

அந்நிலையம், பொதுத் தேர்தலிலிருந்து வேகமாக வேலை செய்து வருகிறது ; இந்திய அரசியல்வாதிகளையும், கட்சிகளையும் குறைகூறி இந்தியாவிற்காக ஒலிபரப்பி வருகிறது.

தலைமையமைச்சரைப் பற்றி அது நேரடியாகக் குறை கூறவில்லை ; ஆனால், 'கட்சிக்குள்ளிருக்கும் கோஷ்டிகள், அயல் நிறுவனங்களுக்கு நிறையச் சலுகைகள் கொடுத்து முதலாளித்துவத்தை வளர்க்கப் பார்க்கின்றன' என்று தாக்குகிறது.

இரஷ்யர்கள், தமக்கும் அவ்வானொலி நிலையத்திற்கும் தொடர்பில்லை என்று கூறுகின்றனர்; 'அது அரசாங்கத்தால் நடத்தப்பெறவில்லை' என்று அவர்கள் கூறுகின்றனர்; 'அது தன்னதிகாரம் படைத்த அமைப்பு' என்றும், 'அதன் கருத்துக்கள் சோவியத் அரசின் கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை' என்றும் கூறப்படுகிறது.

# கடமை ஆற்றுகிறது கழகம்

## எதிர்ப்புகளைக் கண்டு துவளாது

## 'மேதைகள் கருத்தினைச் செயலாக்கியே தீரும்'-- அமைச்சர் மு. கருணாநிதி தெளிவுரை

சென்னை, ஜூன் 30—

"பஸ் முதலாளிகளைப் பழிவாங்க வேண்டும் என்பதற்காக, பஸ் தொழிலைத் தேசியமயமாக்குவதைத் தி. மு. கழகம் தீவிரப்படுத்துகிறது என்று குற்றஞ்சாட்டிய முன்னாள் அமைச்சர் அழகேசன், செங்கற்பட்டைச் சேர்ந்த பஸ் முதலாளிகள், முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலத்திற்குத் தேர்தல் நிதி தந்தார்கள் என்பதற்காகப் பழிவாங்கப்படுகிறார்கள் என்றும் கூறி, 'தேர்தல் காலத்தில் பஸ் அதிபர்களிடம் காங்கிரசுக் கட்சிக்குத் தேர்தல் நிதி வாங்கியது உண்மைதான் என்பதை அவர் ஒத்துக்கொண்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்"

என்று, போக்குவரத்துத் துறை அமைச்சர் மு. கருணாநிதி, பாலர் கலையரங்கில் நடைபெற்ற 'நல்வரவு' மலர் வெளியீட்டு விழாவில் கூறினார்.

சூலமங்கலம் தங்கைகள் குறள் இசை பாடினர்.

திரு. உருத்ரபதி வரவேற்றார்.

முத்தாரம் தினகரன் தொகுத்து அளித்த 'நல்வரவு' மலரை, தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் வெளியிட்டுப் பேசினார்.

டாக்டர் ஏ. இலட்சுமணசாமி தலைமைவகித்தார்.

கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், நலவழித் துறையமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, உள்ளாட்சித் துறை அமைச்சர் எம். முத்துச்சாமி, ஏ. கே. ஏ. அப்துஸ்சமது எம்.ஏ., எம்.பி., டாக்டர் ஹாண்டே எம்.எல்.ஏ., பீர்முகமது எம்.எல்.ஏ. ஆகியோர் பேசினர்.

அமைச்சர் மு. கருணாநிதி மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"காங்கிரசுக்காரர்கள், 'சில திட்டங்களுக்குத் தாங்கள்தாம் ஆரம்பக் கர்த்தாக்கள்' என்பதை மறந்துவிட்டு, அவர்கள் கூறியதையே தி. மு. கழகம் நடைமுறைப்படுத்துகிறபோது எதிர்த்துப் பார்க்கிறார்கள்.

1947-ல், 'பஸ் தொழிலைத் தேசியமயமாக்க வேண்டும்' என்று காங்கிரசார் தீர்மானித்தனர்; அரசியல் சட்டத்திலேயும் அதற்கு வழிவகையும் செய்துவைத்தார்கள்.

சட்டமன்றங்களிலும், மக்கள் மன்றங்களிலும் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை ஒதுக்கித் தள்ளிவிட்டு—பஸ் முதலாளிகளின் வரவு பெருகினால்தான்—அவர்களின் வாழ்வு வளமாகவும் நலமாகவும் இருந்தால்தான் தேர்தலின்போது பெரு நிதி கிடைக்கும் எனக் கருதி, தேசியமயமாக்கும் திட்டத்தை ஒத்திவைத்தார்கள்—காங்கிரசார்!

125 மைல்வரை தனியார் வண்டியும் ஓடலாம்—அரசு வண்டியும் ஓடலாம்; இது, கலப்பு சோஷலிசம்—கலப்பு சமதர்மம் என்று காங்கிரசுத் தலைவர்கள் கூறினர்.

அப்போது சட்டமன்றத்தில், அறிஞர் அண்ணா அவர்கள்கூட, "கலப்படச் சமதர்மம் என்கிறீர்கள்; புராணீகர் மொழியில் அதை, 'அர்த்தநாரீசுவரர் சமதர்மம்' என்று கூறுங்கள்" என்றார்கள்!

இப்படிச் சமதர்மம் பேசியவர்கள், இன்று, கழகத்தவர் தேசியவுடைமையில் அக்கறை செலுத்தும்போது கடிந்து பேசுகிறார்கள்—எதிர்க்க முற்பட்டிருக்கிறார்கள். கழகம், நாட்டுக்குச் செய்ய வேண்டியவற்றை, எவர் எதிர்த்தாலும் துணிந்து நிறைவேற்றியே தீரும்.

நாட்டு மக்கள் அனைவரும் சுபீட்சத்தில் ஆழ்ந்திருந்தபோது—அகமகிழ்ந்து வாழ்ந்திருந்தபோது நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்கவில்லை!

கண்ணீர் ஆறு ஒரு பக்கம்—கதறுகிற மக்கள் வாழும் குடிசைகள் ஒரு பக்கம்—பசியெடுக்கும் வயிற்றைக் கையினால் பிசைந்து குமுறிக்கொண்டிருந்த தாய்மார்கள்—இப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்தில்தான் ஆட்சிக்கு வந்தோம்!

'இப்படிப்பட்ட நேரத்தில் ஆட்சிப் பொறுப்பேற்பதற்கே துணிச்சல் வேண்டும்" என்று திரு. இராஜாஜிகூடக் கூறினார்.

கழகம், ஆட்சிக்கு வந்தால் தமிழ்த்தாய் புத்துயிர் பெறுவாள்—தமிழ்த் தாய்க்கு வந்துள்ள கேடுகள் அனைத்தும் அகன்று போகும்—அன்னைத் தமிழ் அரியணையில் ஏறுவாள்—என்று மக்கள் எதிர்பார்த்தனர்.

தமிழ் மொழிக்கும், திருக்குறளுக்கும் நாட்டில் மதிப்பு ஏற்படும் வகையில் தமிழகத்தில் கழகம் ஆட்சி செய்துவருகிறது.

"ஏழை சிரிப்பான் — அவன் சிரிப்பிலே ஆண்டவனைக் காணலாம்" என்ற தாகூரின் கருத்தினைச் செயலாக்கும் விதத்திலே கழகம் ஆட்சி செய்துவருகிறது!

'ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கிடைக்கும்' என்று கூறினோம்; அந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம்.

சென்னை, கோவையில் மட்டும் செயலாக்கப்பட்டுள்ள அந்தத் திட்டம் குடும்பக் கார்டு கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கெல்லாம் விரைவில் நிறைவேற்றப்பட அரசு முனைந்து முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது."

### ஆறிக் கொண்டிருக்கும் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்ததைக் கொளுத்தினார்; ஆகவே, 'பெரிய அக்கிரமம் நடந்துவிட்டது' என்று நான் கருதவில்லை.

அப்படியே இருந்தாலும்கூட அந்தப் 'பைல்'களில் பெரிய இரகசியம் ஒன்றுமில்லை. அந்தப் பைல்கள் இருந்தால், 'பின்னால் வருகிறவர்கள் போலீசு அதிகாரிகளைப் பழிவாங்குவார்கள்' என்று அவரே சொல்லியிருக்கிறார்!

அதிகாரிகளை நாங்கள் பழிவாங்கக்கூடும் எனப் பக்தவத்சலம் நினைத்திருந்தால், எங்களை அவர் புரிந்துகொள்ளாதது மட்டுமல்ல—'தம்மைத் தாமே ஆராய்ந்து கொண்டிருக்கிறார்' என்று மட்டும் கூறுவேன்.

இந்தி எதிர்ப்புப் போராட்ட நேரத்தில் ஒரு போலீசு அதிகாரி, நான் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்துவிட்டதாகக் கூறியிருக்கிறார்; அன்று அப்படிக் கூறிய அந்தப் போலீசு அதிகாரி, இன்று என்னுடைய பார்வையில்தான் இருக்கிறார்; அவருடைய உத்தியோகத்திற்கு ஒரு துளியும் பாதகம் ஏற்படாத அளவில் பதவியில் இருக்கிறார்.

அன்று அவர் அப்படி நடந்துகொண்டார் என்பதற்காக அவர் மீது ஒரு துளியும் அருவருப்போ கோபமோ எங்களுக்கு வரவில்லை."

## திருடர்கள் நடமாட்டம்

### போலீசு ஆணையர் விளக்கம்

"சென்னை நகரில் ஒரு நாளைக்கு 3,000 குற்றவாளிகள் தெருக்களில் நடமாடுகிறார்கள்"

என்று போலீசு ஆணையர் சிங்காரவேலு கூறினார்.

செய்தியாளர்களிடம் அவர் மேலும் கூறியதாவது :—

"அவர்கள் அனைவரும் குற்றம் புரிவதில்லை; ஆனால், வாய்ப்புக் கிடைக்கும்போது, திடீரெனக் குற்றம் புரிந்துவிடுகிறார்கள்.

தொடர்ந்து குற்றம் செய்யக் கூடியவர்களும் இருக்கிறார்கள்; அவர்களைப் பற்றிப் போலீசுத் துறை குறிப்புகள் அரசுப் பதிவு ஏடுகளில் உள்ளன."

## அமைச்சர் மாதவன்

### நிகழ்ச்சிகள்

சென்னை, ஜூன் 1—

சட்ட அமைச்சர் செ. மாதவன் 2—7—67 மாலை 6-மணிக்கு விழுப்புரத்தில் கூட்டுறவு வீட்டு அடமான பாங்கியைத் திறந்துவைப்பார்; பின்னர், நகராட்சிமன்றம், வழக்கறிஞர்கள் சங்கம் ஆகியவை அளிக்கும் வரவேற்புகளில் கலந்துகொள்வார்.

### முகவரி :

கா. காளிமுத்து,
விரிவுரையாளர்,
'வெற்றி' தனிப் பயிற்சிக் [கல்லூரி
மதுரை-1.

### புதிய முகவரி

இராம அரங்கண்ணல்
15, நடுத்தெரு, மயிலாப்பூர்
சென்னை-4.

## சட்டமன்ற வரலாற்றில் புது திருப்பம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிதி அதிகாரமாயினும் மொழி அதிகாரமாயினும் எல்லாம் மத்திய அரசிடமே குவிந்திருப்பதால், மாநிலங்கள் முழு உரிமை பெறுவதற்கான போராட்டத்திற்கு அறிஞர் அண்ணா அவர்கள் தானைத் தலைவராக—முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

'அமைச்சரவைக்கு நல்வரவு' என்று கூறப்பட்டது. இந்த நல்வரவுக்கு உரியவர்கள் மூன்றரைக் கோடி மக்களே ஆவர். அவர்கள், இட்ட கட்டளையைச் செய்யக்கூடியவர்கள் நாங்கள்."

### அமைச்சர் முத்துச்சாமி

அமைச்சர் எம். முத்துச்சாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"பாதை நழுவிச் சென்றிடமாட்டோம்; சொன்னதை மறந்துவிடவும் மாட்டோம்; அந்த அளவுக்கு, விழிப்போடும் பாதுகாப்போடும் கழகம் இருக்கிறது.

கழகத்தவரை, 'படிக்காதவர்கள்' என்று ஒருவர் கூறினாராம். அராஜகம் எப்படிச் செய்வது—கள்ளநோட்டு எப்படி அடிப்பது—எப்படிக் கள்ளக்கடத்தல் செய்வது—என்பனவற்றைக் காங்கிரசார் படித்திருக்கக்கூடும்; அவற்றை நாங்கள் படிக்கவில்லை என்பதுதான் உண்மை."

### சாதிக் பாட்சா

அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நாட்டில் அமைதியான புரட்சி நடந்து முடிந்திருக்கிறது. இந்த அமைதிப் புரட்சிக்கு வித்திட்டவர் அறிஞர் அண்ணா ஆவார்கள். இந்த நல்வரவு அறிஞர் அண்ணா அவர்களுக்கே அளித்த நல்வரவாகும்."

### ம. பொ. சிவஞானம்

திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., மலரை வெளியிட்டுப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :-

"மனிதனுக்குத் தேவையான உணவு கிடைக்காத போது—சோறு கிடைக்காதபோது, மக்கள், ஆட்சியிலிருந்த காங்கிரசைத் தூக்கியெறிந்தனர்.

நடந்து முடிந்த தேர்தலின்போது, பழைய அமைச்சர்கள் அனைவரும் மகாத்மாக்களாகவே இருந்தாலும், ஆட்சியிலே இருந்து தூக்கியெறியப்பட்டிருப்பார்கள்; காரணம், மக்களால் அதற்குமேல் துன்பத்தைத் தாங்கமுடியவில்லை என்பதுதான்.

ஆட்சியை மாற்றும் புரட்சி நடந்து முடிந்துவிட்டது. இனி, மொழி உரிமையைப் பெறப் புரட்சி செய்தாக வேண்டும்.

பொருளாதார உரிமை பெறும் புரட்சி நடைபெற இருக்கிறது.

ஏற்றத்தாழ்வைப் போக்கும் சோஷலிசப் புரட்சி நடந்தாக வேண்டும்.

நடைபெற்ற புரட்சியிலும் நான் ஓர் அங்கமாக இருந்தேன்; நடைபெறும் புரட்சிகளிலும் அங்கமாக இருந்து பணிபுரிவேன்."

### ஏ.கே.ஏ. அப்துஸ்சமது

திரு. ஏ. கே. ஏ. அப்துஸ் சமது எம்.ஏ., எம்.பி. பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"ஆட்சியாளர் மட்டும் விழிப்பாக இருந்து பயன் இல்லை; மக்களும் விழிப்பாக இருக்கவேண்டும்.

சமுதாய எதிரிகள் அரசுக்கும் சமுதாயத்திற்கும் எதிராகக் கெடு செயல்களில் இறங்கும்போது அரசுக்குத் தெரிவிக்கவும், அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புக் கொடுக்கவும் மக்கள் முன்நிற்க வேண்டும்."

### எச். வி. ஹாண்டே

டாக்டர் எச். வி. ஹாண்டே எம்.எல்.ஏ. பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"கழகம் ஆட்சிக்கு வந்திராவிட்டால், நாட்டில் அமைதி ஏற்பட்டிருக்காது. குழப்பத்தையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தக்கூடிய ஆட்சிதான் ஏற்பட்டிருக்கும்.

இப்போது அண்ணா அவாகள், எதிர்க் கட்சியினர் கூறுவதையும் மதித்து—எதிர்க் கட்சியினர் ஆத்திரமூட்டுவதாக இருந்தாலும்—அண்ணா அவர்கள், பொறுமையாகவும் பொறுப்பாகவும் அதற்குப் பதிலளித்து, நல்லாட்சி செலுத்துவது நல்வரவுக்குரியதாகும்."

### பீர் முகமது

மேலப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் எம். எம். பீர் முகமது எம்.எல்.ஏ. பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"குழந்தை பட்டினியால் துடிதுடித்துச் செத்தபோது தாய் கூறியது — கீழத்தூவலில், வாயில் துணியை அடைத்து வரிசையாக நிறுத்திவைத்துக் காங்கிரசு அரசினர் சுட்டுத் தள்ளியபோது நாட்டு மக்கள் கூறியது—'இந்தி மொழிக்கு, இனிய தமிழை இரண்டாந்தரமாக்காதீர்' என்று பொங்கி எழுந்த மாணவர் கூட்டத்தை -- 156 மாணவ மாணிக்கங்களைச் சுட்டுக் கொன்றபோது இந்த நாட்டு மக்கள் கூறியது—கலைஞர் கருணாநிதியை -- கண்வலி இருந்தபோதிலும் -- பாளையங்கோட்டைச் சிறையில் அடைத்துவைத்துக் கொல்லாமல் கொல்லுவதைப்போலத் துன்பப்படுத்தினார்களே அப்போது இந்த நாட்டு மக்கள் கூறியதுதான் இந்த அமைச்சரவைக்கான நல்வரவு."

ரோஜா
பாக்கு &
புகையிலை
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

## நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

### 2--7--67

**சென்னை 88-வது வட்டம்**

குறள் நெறி மன்றத் திறப்பு விழா; இரவு 7 மணிக்கு, தேனாம்பேட்டை பெரியார் சாலையில், தலைவர் : பச்சையப்பன்; பேசுவோர் : ஈ. ஆர். கிருட்டினன் எம்.எல்.ஏ., முத்துச்செல்வன் எம்.எல்.ஏ., வ. புருடோத்தமன் எம்.சி., அலமேலு அப்பாதுரை, க. இளமதி, திராவிடசிங்கம், சண்முகம், எஸ். கே. வாசு, அறிவானந்தம்.

**கடலூர்**

நகர தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு மஞ்சைநகர் மைதானத்தில்; தலைவர்: இரெ. இளம்வழுதி எம்.ஏ.,பி.எல்.,எம்.எல்.ஏ.; பேசுவோர்: அமைச்சர்கள் மு. கருணாநிதி, ஏ. கோவிந்தசாமி, மற்றும் வி. கிருஷ்ணமூர்த்தி எம்.எ., பி.எல்.,எம்.பி., ஜி. பெருமாள் ராஜா எம்.எல்.ஏ., எம்.ஏ. சண்முகம், ஏ.வி. தண்டபாணி, கி. கோவிந்தராசன், நகராட்சிமன்ற உறுப்பினர்கள் வி. நடேசன், கி. தண்டபாணி, கே. ஜெயராமன், சரோஜா ஜெபராமன், கே. முத்து, ஆர். சுப்பிரமணியன், ஆர். நடராசன், கே.ஜி. சாமிநாதன்.

**போளூர்**

நகர தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர் : ஏ.சி. பெருமாள்; பேசுவோர் வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., எஸ். முருகையன் எம்.எல்.ஏ., எஸ். குப்பம்மாள் எம்.எல்.ஏ., கே. வி. குப்புசாமி, தொ. ப. சீனிவாசன், பி. கிருட்டினன், ப. பரந்தாமன், கோ. கோவிந்தசாமி, மு. மொழியாளன்.

**மதுரை 33-வது வட்டம்**

இராமாமிர்தத்தம்மாள் படிப்பக 11-வது ஆண்டுவிழா; இரவு 7 மணிக்கு கீழச்சந்தைப்பேட்டையில்; தலைவர்: கே. தேவஇரக்கம்; பேசுவோர்: சி.பி. சிற்றரசு எம்.எல்.சி., எம்.எம். முத்தரசு, எஸ். முனியப்பன், சீ.மு. பாண்டியன், கே. பாலகுரு.

### 3--7--67

**மதுரை 3-வது வட்டம்**

கைவல்யம் நினைவுப் படிப்பகத்தின் சார்பில் மாலை 7 மணிக்கு தல்லாகுளம் பெருமாள் கோயில் திடலில்; பேசுவோர்: சி.பி. சிற்றரசு எம்.எல்.சி., கு. திருப்பதி பி.ஏ.,பி.எல்., எம்.எம். முத்தரசு, பொ. இராமச்சந்திரன், அ. ப. அங்கப்பன்.

**சென்னை 48-வது வட்டம்**

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு மூக்குச்செட்டித் தெருவில்; தலைவர்: அமுதாராகவன்; பேசுவோர்: மதுரை எஸ். முத்து எம்.எல்.சி., க. அறிவழகன் எம்.ஏ., எம். இராசாங்கம் எம்.எல்.ஏ., டாக்டர் ஹாண்டே எம்.எல்.ஏ., திருச்சி சௌந்திரராசன், கேரளீயன், கோதண்டன், மற்றும் பலர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.